Koviloor Digital Library

4-4

அருட்பிரகாசர் தரும் அகர விளக்கம்

அ

கோவிலூர் ஆதீனம்
5472
R65
கோவிலூர்-630 307

கஞ்சனூர் - ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க சுவாமிகள்
அவர்களின் மாணாக்கர்

Dr. க. சீனிவாசன், R. I. M. P.
அவர்களால்

இந்நூல் இயற்றப்பெற்றிருக்கிறது.

திருமூலர் சித்த வைத்தியசாலை,
பந்தணைநல்லூர்.
கும்பகோணம் வட்டம், தஞ்சாவூர் மாவட்டம்.

—[விலை 0-60 காசு]—

Koviloor Digital Library

முன்னுரை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

திருவருட் பிரகாசர் திருவடிகளே சரணம் சரணம். பொதுவாக, இறையுண்மையை எளிதிற் புரிந்து கொள்ள எழுத்துக்களுக்கெல்லாம் முதலான 'அ' என்னும் எழுத்தைக் கொண்டுவிளக்கம் செய்தார்கள் பெரியோர்கள். அவ்விளக்கத்தை யாவரும் சிறப்பாக அறிய 'அருட்பிரகாசர் தரும் அகர விளக்கம்' என்னும் இந்நூல் திருவருட்கருணை வலத்தால் எழுதப்பெற்றிருக்கிறது. இந்நூலினை தங்கள் சிந்தனைக்குதேனாக அளித்து மகிழ்கிறேன். சுவைப்பதுவும் அது குறித்து மலரும் சொல்லாடல்களும் பணிவோடு நோக்கப்பெறும்.

இந்நூலுக்கு - அண்ணாமலை நகர். அண்ணாமலை பல்கலைகழக தத்துவத்துறை போகியப்பேராசிரியர். திருமிகு. சி. இராமலிங்கனார் M.A. அவர்கள் ஏற்றமிகு அணிந்துரை அளித்துள்ளார்கள். அவர்கட்கு என்றன் நன்றியும் வணக்கமும் என்றென்றும் உரியதாகும்.

இந்நூலினை எழிலுற அச்சிட்டுதந்த மன்னார்குடி பிரபு அச்சகத்தார்கள் அவர்கட்கும் என் நன்றி உரியதாகும்.

எல்லாரும் எல்லா நலன்களும் பெற்றுயர
எல்லாம் வல்லான்றனை ஏத்துகிறேன்.

அன்பன்,
க. சீனிவாசன்.

Koviloor Digital Library

திருச்சிற்றம்பலம்

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

திருவருட்பிரகாசனார் திருவடிகளே துணை.

அணிந்துரை

(பேராசிரியர் சி. இராமலிங்கனார், M. A., தத்துவத்துறை,
அண்ணாமலைப் பல்கலைகழகம் - அண்ணாமலை நகர்)

'அருட்பிரகாசர் தரும் அகர விளக்கம்' என்னும் இச்சிறுநூல் வெளிவருவதறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொள்கிறேன். இந்நூலை ஆக்கியோர், எனது கெழுதகை நண்பர் உயர்திரு. டாக்டர் க. சீனிவாசன் அவர்கள். அவர்கள் வள்ளல் பெருமானிடத்தில் அளவற்ற பக்தி பூண்டு ஒழுகுபவர்கள். முறையாக பயின்று அத்துவித. சித்தாந்த நூல்களில் தேர்ச்சி பெற்றவர். அவர்கள் தாம் பெற்ற பயிற்சியின் பின்னணியில் வள்ளற் பெருமானது திருவருட்பாவை அணுகுகிறார்கள். அருட்பிரகாசர் அகரத்திற்குத் தருகின்ற விளக்கத்தை ஆசிரியர் தெள்ளிதின் புலப் படுத்துகிறார்கள். ஆசிரியருக்குச் சமய நூல்களில், சிறப்பாக திருமந்திரத்தில் உள்ள பயிற்சி விளக்கு கின்றது. திருவருட்பா அகரத்திற்குத்தந்துள்ள விளக்கத்தை இந்நூல் நன்கு வெளிப்படுத்துகின்றது. அகர உவமையை எடுத்தாளாத நூல்களே இல்லை எனலாம். அத்தகைய சிறப்புமிக்க அகரத்தின் விளக்கத்தை இந்நூல் பெற்று விளங்குகின்றது.

Koviloor Digital Library

திருவருட்பாவின் ஆழத்தின் அகலத்தையும் உணர இந்நூல் பெரிதும் துணைபுரியும். கற்றறிந்தோர் இவ்விளக்கத்தைப் பாராட்டுவர் என்பது எனது துணிவு. ஏனையோருக்கு இது விருந்தாகும். அகர உவமையின் சிறப்பைச் சுருக்கி இந்நூல் தருவது, அருமையான முயற்சியாகும் மேலும் இத்தகைய நூல்களை, ஆசிரியர் வெளியிட எல்லா வல்ல அருட் பெருஞ்சோதி இறைவனை அடியேன் இறைஞ்சுகின் றேன். என்னையும் பொருட்படுத்தி இச்சீரிய நூலுக்கு ஓர் அணிந்துரை தருமாறு பணித்த ஆசிரியரது பெருந்தகைமையையும், திருவருளையும் போற்று கின்றேன்.

அண்ணாமலை நகர்,
23—12—74.

இங்ஙனம்,
சி. இராமலிங்கம்

Koviloor Digital Library

உ

அருட்பெருஞ்சோதி! தனிப்பெருங்கருணை!

அருட்பிரகாசர் தரும் அகர விளக்கம்

புண்ணிய பூமியாகிய நமது நாட்டில் மக்கள் நன்னெறிப் பற்றி உய்ய எல்லாம் வல்ல இறைவன் ஒவ்வொரு நூற்ருண்டிலும் பல மகான்களைத் தோற்றுவித்து அவர்கள் மூலம் மக்கள் நன்னெறிபற்றி நடக்கும் மார்க்கங்களை உபதேசித்தருள் செய்துள்ளார்கள்,செய்து வருகிருர்கள்.தற்போது முடிந்த நூற்ருண்டின் தொடக்கத்தில் ''இறைவன் அருள் திருமேனியாகத் தோன்றி 'ஒன்றே குலம்' 'ஒருவனே தேவன்' என்ற முற்கால ஞானிகள் வாக்கிற் கிணங்க உலகப் பொதுநெறியாகும் சன்மார்க்கப் பெருநெறியை வகுத்துக் கொடுத்து, இது தொடங்கி அளவிட்டறிய முடியாத காலம் வரை நமது அருட்பெருஞ்சோதியார் அருளாட்சி செலுத்தும் காலமாகும். இனி மக்களுக்குள் சாதி, மதம், சமயம். உயர்வு, தாழ்வு என்ற வேறுபாடு அனைத்தும் மறைந்து விடும். மக்கள் யாவரும் சமம் என்ற நீதியே நிலைக்கும். எல்லா மதங்களுக்கும் சமயங்களுக்கும் பொதுவான ஜோதிவடிவான கடவுள் ஒருவரே. அவர் சன்னிதானத்தில் உயிர்கள் யாவும் சமம். இந்த உன்னத நெறி உலகம் யாவும் விளங்கும் காலம் இது, அதற்கு ஏற்ப எனது ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை அன்பர்களாகிய நீங்கள் அனைவரும் சுத்த சன்மாக்க நெறியினைப்பின் பற்றி அதனுல் உயர்ந்த இன்பப் பேற்றினைப் பெறுங்கள்'' என்று அருளி,தாம் உணர்ந்த சுருதி. குரு,சுபானுபவங்களை எல்லாம் கடல் அலைபோல் வாரி வாரி வழங்கி உள்ளார்கள் வடலூர் இராமலிங்க அடிகள். அவர்கள் தந்த 'அருட்பா' எனும் அருட்செல்வத்தை அனைவரும் பெற்று அதில் உள்ள அருளமுதத்தை உண்டு ஆனந்தம் பெற அவர்கள் தந்த உபதேசமொழிகளை அவர்கள் தந்த பொருளுடன் சிறு சிறு தொகுப்புக்களாக

Koviloor Digital Library

வெளியிட்டால் வருங்காலச் செல்வங்களாகிய மாணவ மணி களுக்கு இராமலிங்க அடிகள் எதற்காக தோன்றினார்கள்? எந்த கொள்கையைப் பற்றி வாழ்ந்து காட்டினார்கள்? அவர் கள் நமக்கருளிய அமுத மொழிகள் யாவை? அவைகள் தரும் பயன் என்ன? என்பதையெல்லாம் புரிந்து கொள்ளவும், அவர்கள் கொண்டஉயர்ந்த கொள்கைகள் மின்னல்வேகத்தில் பரவி உலகத்தையே வளைத்துக் கொண்டு விட்டதையும், அவர்களுடைய சத்திய வாக்கையும் கண்டு கொள்வார்கள். அவர்களும் இந்த உயர்ந்த நெறியைப் பின்பற்றி மற்ற மக்க ளுக்கும் உலகத்திற்கும் எடுத்துக்காட்டாக விளங்குவார்கள் என்ற நோக்கோடு திருவருட்பா நூல்வழி நின்று பொருள் தொகுப்புக்களும், அதில் வரும் விளக்கங்களும், அருட்பாவி லிருந்தே வள்ளலார் வாக்கைக் காட்டி அந்த வாக்கியங்கள் உண்மை என்பதற்கு பல மகான்களை வாக்கிய ரூபத்தில் அழைத்து சான்று தரும்படி செய்து தொகுப்புக்கள் வரும். தொகுப்புக்கள் யாவும் சிறு சிறு விளக்கங்களாக தொடர்ந்து வரும் அத்தொகுப்புக்களூடே ஐயா அவர்கள் ஓரிடத்தில் கூறும் வாக்கியங்களுக்கு மற்றோரிடத்தில் விளக்கம் தருவதை புரிந்து கொள்ளலாம். வெளிவரவிருக்கும் தொகுப்புக்களுக்கு கடவுள் வாழ்த்தாக அமைய, " அகர விளக்கம் " எனும் இந்நூல் இனிதே வருகிறது. எல்லாமுடைய அருட்பெரும் சோதி வடிவமே சகல ஜீவபரமாக விளங்குகிறது என்று அனைத்து பெரியோர்களும் கண்டுரைத்ததுபோல் வள்ளல் பெருமானும் அருட்பெருஞ்சோதி ஒன்றே அகில சராசரம் அனைத்துமாய் விளங்குகிறது என்றும், அதன் அசைவாகிய ஆனந்த நடனத்தாலேயே உலக இயக்கங்கள் நடைபெறுகிறது என்பதையும் அகரத்தை முன்வைத்து காட்டியுள்ளார்கள். முதலில் அகரம் வரும் அற்புத இடங்களையும், அதன் விளக் கத்தையும், அதனையே வலியுறுத்தும் அனைத்துப் பெரியோர் களின் பொன்மொழிகளையும், அப் பொன்மொழிகள் தன்னைப் போற்றி பொன்றுதப்பேரின்பம் பெறும்வழியையும் இந்நூலில் காணலாம்.

Koviloor Digital Library
5472
R65

அகரம் என்னும் சொல்லே அநேக இடங்களில் அருட்பிரகாசர் ஆள்கிருர்கள். ஆனந்த நடனமிடும் அற்புதக் கடவுளாம் நடராசப் பெருமான் மீது பாடப்பெற்ற நடராசபதிமாலேயில்,

''அகரநிலே முழுதுமாய் அப்பாலுமாகி நிறை
அமுத நடராஜ பதியே'' என்றும்
''அகரநிலே முழுதுமாய் அப்பாலுமாகி ஒளிர்
அபய நடராஜ பதியே'' என்றும் கூறுகிருர்கள்.

ஸ்ரீ கோவிலூர் ஆதீனம்

எழுத்துக்களுக்கெல்லாம் முதற் காரணமாக அகரம் விளங்குகிறது அகர நிலே முழுதுமாய் — அக்கரங்கள் அனேத்துமாக விளங்கியும், அப்பால் தனித்து நிற்கும் அகரமாகவும் விளங்குவது போன்று எல்லா உலக உயிர்த் தோற்றங்களாகவும் அவ்வுயிர்களுக்குள்ளும் ஒளியாகவும் நிறைந்து விளங்குகின்ற நடராசபதி என்று காட்டுகிருர்கள்.

அடுத்து பதிவிளக்கத்திலே ஒரு பாடலில்,

'அகரநிலே விளங்கும்சத்தர் அனேவருக்கும் அவர்பால்
அமர்ந்த சத்திமாரவர்கள் அனேவர்க்கும் அவராற்
பகரவரும் அண்டவகை யனேத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள் அனேத்தினுக்கும் பதங்களனேத் தினுக்கும்
இகரமுறு முயிரெவைக்குங் கருவிகளங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்களேவைக்கு முத்தியெவைக்கும்
சிகரமுதற் சித்திவகை யெவைக்கும் ஒளிவழங்குந்
திருச்சிற் றம்பலந்தனிலே தெய்வம் ஒன்றே கண்டீர்!

சந்தரனேவர்க்கும் — சத் என்பது சத்தியம் உண்மை கடவுள்; சத்தர் — கடவுளர்; அனேவர்க்கும் ஆக்கும் கடவுள், காக்கும் கடவுள், ஒடுக்கும் கடவுள், மறைக்கும் கடவுள், அருளும் கடவுள் என கடவுளர் (சத்தர்) ஐவருக்கும்; அவர்பால் அமைந்த சக்திமாரவர்க்கும் — இச்சை, கிரியை, ஞான, ஆதி, பரை என்ற ஐந்து சக்திமார்களும் (கலந்து) உலகத்தை இயங்கச் செய்யும் தலேவர்களுக்கும் தலேமையாய அருட்சோதி ஒன்றே.

Koviloor Digital Library

அகர நிலை விளங்கு சத்தர் — அகரம் எல்லா எழுத்துக்களுக்கும் தலைமை வகிப்பதால் அகரத்தை வைத்தே கடவுள் விளக்கம் காட்டுவதால் அத்தலைவர்கள் எழுத்துக்களுக்கு எல்லாம் தலைமையான அகரம் போல் சத்தர்கள். இதனால் அகரத்தின் முதன்மையை நன்ருகக் காட்டியுள்ளார்கள்.

அகவலிலும் அருட்பிரகாசர் அகரத்தின் சிறப்பினை நன்கு அறிவிக்கின்ருர்கள்.

''சிகரமும் வகரமும் சேர்தனி உகரமும்
அகரமுமாகிய அருட்பெருஞ் சோதி''

சிகரம் — ஜோதி; வகரம் — அருள்; சிவ — அருட்ஜோதி; உகரமும் — உலகம், உரு, உயிர், உணர்வு யாவுமாகிய, பரமாகவும் விளங்கி தனித்து அகரம் போல் தனிப்பெரும் தலைவஞகவும் விளங்கும் அருட்பெருஞ்சோதி என்று அகரம் ஒன்றே சிகரமும் வகரமும் ஆகியதென்று அகரத்தின் தனிச் சிறப்பை விளக்குகிருர்கள்.

அகார உகார மகாரம் மூன்றும் சேர்ந்ததே ஓங்காரம். இது பிரணவம் எனப்பெறும். அந்த ஓங்காரத்திற்கும் அகாரமே ஆதாரம். இதனை அகவலிலே,

''அகரமும் உகரமும் அழியா சிகரமும்
வகரமும் ஆகிய வாய்மை மந்திரமே''

என கூறியுள்ளார்கள். பிரணவம் அருட்பெருஞ்சோதியாகவும் சத்தியமொழியாகவும் விளங்குகிறது என்றும்,, மந்திரங்க ளுக்கு ஆதியாகிய பிரணவத்திற்கு அகரமே முதன்மையாக விளங்குகிறது என்றும் கூறியுள்ளதை கருத்தில் கொள்ள வேண்டிய தொன்ருகும்.

Koviloor Digital Library

இதனையே,

''ஆங்காரம் நீக்கும் அகர உகரமதாய்''

எனும் அருட்பாவிற்கிசைய சிவஞானபோதமும் அகாரம் ஆங்காரத்தையும், உகாரம் புத்தியையும், மகாரம் மனத்தையும் செயல்படுத்துகிறது என்று அறிவிக்கின்றது.

''தகர மெய்ஞ்ஞான தனிப்பெரு வெளியெனும்
அகர நிலைப்பதி அருட்பெருஞ்சோதி''

எனும் அகவலடியில், ஞானகாயத்தில் அருட்பெருவெளியாய், அகரம் போல் தனிப்பெரும் பதியாக அருட்பெருஞ்சோதி விளங்குகிறது என்பதை அகரத்தை முன்வைத்து பதி நிலையை அறிவிக்கின்றார்கள்.

நாம் நாளும் பாடிக் களித்திடும் நாமாவளியில் ''அகர உகர சுபகரவர '' என்று கூறுகிறார்கள். அதாவது, சுபகர—எல்லா நலங்களும், வர—அருள, ஆற்றலுடையது அகர உகரமாகிய பிரணவம்.

''அகர உகர மகர வகர
அமுத சிகர சரணமே''

எனும் அழகிய அடிகளால், அகர உகர மகரம் சேர்ந்த பிரணவ தியானத்தால் அருளமுதத்தையும் ஜோதி சொரூபனை சிவனின் திருவடிகளையும் பெறலாம் என்பதை உணர்த்துகிறார்கள்.

''அகர சபாபதி சிகர சபாபதி
அனக சபாபதி கனக சபாபதி
மகர சபாபதி உகர சபாபதி
வரத சபாபதி சரத சபாபதி
சபை — பொது. நடு.

Koviloor Digital Library

அகரம் போன்று தனித்தலைமைப்பதி; ஜோதியாக விளங்கும் பதி; அனைத்துமாய் நிற்கும் பதி; பொற்சபையில் விளங்கும் பதி; நடனமாடும்பதி; எல்லா உயிர்களுள்ளும் விளங்கும்பதி; அருளும்பதி, ஆளும்பதி; என்று பரம்பொருளை பதியாக விளக்கும்போது அகரத்தை முன்வைத்தே விளக்கியுள்ளார்கள். இனி அகர விளக்கத்தைக் காண்போம்,

அகர விளக்கம்

மகாதேவமாலையின் முதற் பாடலில் ,

> ''உலகநிலை முழுதாகி ஆங்காங்குள்ள
> உயிராகி உயிர்க்குயிராம் ஒளிதா னுகி''

என்று இறைவன் நிறைந்த திருக்கோலத்தைக் காட்டுகிறூர் கள். இந்த அருள் வாக்கியத்தை வைத்து அகரத்தின் நிலையைப் பார்த்தால் மிக நன்ருக அதன் நிலை விளங்கும். அருட்பெருஞ்சோதியாகிய தலைவன் உலகநிலை முழுதாகி விளங்குவது போல அகரம் ஒன்றே எல்லா எழுத்துக்களுமாகி; ஆங்காங்கு உள்ள உயிராகி என்பதுபோல எல்லா எழுத்துக்களையும் இயக்குகின்ற உயிர் எழுத்துக்களான ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ ஆகி, உயிர்க்குயிராம் ஒளிதாருகி என்பது போல அகரம் - இந்த உயிர் எழுத்து எல்லாவற்றிற்கும் தானே உயிராக விளங்குகிறது. இதனை தெளிவாக உணர்ந்து கொள்ள அகரத்தை தனித்தனி உறுப்புகளாக இப்படி,

பிரித்தால் இதைக்கொண்டு எல்லா உயிர் எழுத்துக்களும் அமைந்திருப்பது விளங்கும். அந்த உயிர் எழுத்துக்களைக் கொண்டு எல்லா எழுத்துக்களும் அமைந்திருக்கின்றன. இந்த உறுப்புகள் இன்றி எந்த எழுத்தும் அமையாது. எனவே அகரம் இல்லையேல் எழுத்துக்கள் இல்லை. இறைவன் இன்றேல் உருவம், நாமம், உயிர், உணர்வு, யாவும் உள்ள உலகம் இல்லை என்பதை மிகத் தெளிவாகக் காட்டியுள்ளார்கள்.

Koviloor Digital Library

''சராசர உயிர்தொறும் சாற்றிய பொருள்தொறும்
விராவியுள் விளங்கும் வித்தக மணியே''

எனவரும் அகவற்பாவும் மேற்சொன்னப் பொருள்கள் போலவேபொருந்துகிறது.

திருமூலர் தந்த திருமந்திரத்தில்,

''ஓரெழுத்தாலே உலகெங்கும் தானுகி
ஈரெழுத்தாலே இசைந்தங் கிருவராய்
மூவெழுத்தாலே முளைக்கின்ற ஜோதியை
மாவெழுத்தாலே மயக்கம துற்றதே''

முதலெழுத்தாகிய அகரத்தை ஓரெழுத்து எனவும்

''தானே பரஞ்சுடராய் தத்துவமாய் நிற்கும்
தானே அகரஉகர மதாய் நிற்கும்'' எனவும்
''இணையார் திருவடி எட்டெழுத்தாகும்'' எனவும்
''அகார உகார சிகார நடுவாய்
வகார மோடா றும்வளி யோடுங்கூடி
சிகார முடனே சிவன்சிந்தை செய்ய
உகார முதல்வன் உவந்து நின்றுனே''

எனவும் பிரணவத்தின் குறிப்பை அகரத்தின் மூலம் காட்டி, மேலும்,

''அற்ற விடத்தே அகரமா வதாவது
உற்ற விடத்தே உறுபொருள் கண்டிட
செற்ற மறுத்த செழுஞ்சுடர் மெய்ப்பொருள்
குற்ற மறுத்த பொன்போலும் குளிகையே!

எனும் பாவால் அகரம் ஒன்றே சிவப்பரம் பொருளை காட்டும் குளிகை என காட்டப்பெறுகிறது. அகரத்தை வைத்து தூல மாக எழுத்துக்களைக்காட்டி உலகநிலை உயிர்நிலைகளை விளக்கு

Koviloor Digital Library

வது போல் இறைவன் சூக்குமமாக உள்ளத்தின் உள்ளே ஒளிப்பொருளாகிய உணர்த்த வல்லது எனவும் சொல்லப் பெறுகிறது.

''அகரம் உயிரே உகரம் பரமே'' என்று சிவப் பரம் பொருளை அகர ரூபமோக சொல்லியும்

''ஐந்து கலையில் அகராதி தன்னிலே'' என்று அகாரம் கலைக்குமுதன்மையானது என்பதையும்இயம்புகிறது. அதாவது பிரதிட்டாக்கலை, நிவர்த்தி கலை, வித்தியா கலை, சாந்தி கலை, சாந்தீயாதீத கலை ஆகிய ஐந்துகலைகள் காலத்துவா என வழங்கப்பெறும். இந்த அத்துவாக்களுக்கு முதலாவதான வண்ணத்துவா (எழுத்து)விற்கு முதலாக விளங்குவது அகாரம் என்று திருமந்திரம் தெற்றென விளக்குகிறது.

''ஆறும் அறிவார் அகாரம் அவனென்று
பாரும் உகாரம் பரந்திட்ட நாயகி
தாரம் இரண்டும் தரணி முழுதுமாய்
மாறி எழுந்திடும் ஓசை யதாமே''

எனவரும் பாவில் அகாரமாகிய சிவமும் உகாரமாகிய சத்தியும் பிரபஞ்சமாக பரவி ஓங்காரமான பிரணவாகாரமாக விளங்குகிறது எனவும் லிங்க ரூபமாக விளங்குகிறது எனவும் திருமூலர் தெரிவிக்கின்றார்.

மேலே திருமூலர் சொன்னது போலவே திருவள்ளுவப் பெருந்தகையார் தம் குறட்பாவில்

''அகர முதல எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு'' — என்றும்

ஆதிபகவன் உலகம்யாவுமாயும் உலக முதல்வனாயும் விளங்குவதை எல்லா எழுத்துக்களும் தானே ஆகி எல்லா எழுத்துக்களுக்கும் முதன்மையாகி விளங்கும் அகாரத்தை வைத்தே காட்டுகிறார்.

Koviloor Digital Library

இக்கருத்தினையே சிவஞானபோதத்தில்,

''ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றேபதிபசுவாம்
ஒன்றென்ற நீ பாசத்தோடுளைகாண் — ஒன்றின்றால்
அக்கரங்கள் இன்றாம் அகரஉயிர் இன்றே
விக்கிரமத் தென்னும் இருக்கு'' என்ற பாடலால்

அகரஉயிர் இன்றேல் அக்கரங்கள் இல்லை என மெய்கண்ட தேவர் மெய்மொழி தருகிறார் இதற்கு முன்னர் மொழிந்தமை போலவே அகார உறுப்புகள் இன்றேல் ஒரெழுத்தும் அமையா தென்பதை தெளிவாக அறிய கிடக்கிறது.

''ஒன்றென மறைகள் எல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்னும் பன்மை நிகழ்ந்ததென்னை யெண்ணில்
நன்றவை பதிதான் ஒன்று என்று அக்கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே''

என்னும் சிவஞானசித்தியார் பாடலால், ஒன்றாகிய இறைவன் உயிர்கள் தோறும் கலந்து உலகமெல்லாம் நீக்கமற நிறைந் திருப்பதை விளங்கவைக்க ஒன்றாகிய அகரம் எல்லா எழுத்துக் களிலும் விரவி நிற்றலை எடுத்துக்காட்டி சான்று தருகிறார் அருணந்திதேவர்.

இவற்றிற்கெல்லாம் மிக விளக்கமாக தாயுமான சுவாமிகள் அருளிய பாடல் மேற்கண்ட கருத்தினை நிலைநிறுத்தி காட்டுகிறது.

Koviloor Digital Library

''அகர உயிர் அனைத்து எழுத்தும் ஆகி வேருய்
அமர்ந்ததென அகிலாண்டமனைத்துமாகி
பகர்வன எல்லாமாகி அல்லதாகி
பரமாகி சொல்லரிய பான்மையாகி
துகளறு சங்கற்ப விகற்பங்கள் எல்லாம்
தோயாத அறிவாகி சுத்தமாகி
நிகரில் பசுபதி ஆன பொருளை நாடி
நெட்டுயத்து பேரன்பால் நினைதல் செய்வாம்''

என்ற இப்பாடலில் அகர உயிரே எல்லா எழுத்துக்களுமாயும், அது தனித்து நிற்பது போலவும் அகிலாண்டம் அனைத்துமாய் அல்லதாய் தனித்து நிற்கும் பதி என்று சொல்லி மேலும் ஒரு சான்றை தந்துள்ளதை எண்ணி ஏற்கக் கூடியதொன்ரும்.

தேவியை அக்கர ரூபமாக ஐம்பத்தோரட்சரி என்று ''அகராதி க்ஷகாரந்தம்'' எனும் ஐம்பத்தோரு அட்சரங்களும் அம்பிகையின் ரூபமாக அமைந்துள்ளதை காட்டும்போது லலாடஸ்தானமாகிய உச்சி அகரமாக விளங்குகிறது என்று தேவிபராக்கிரமம் கூறுகிறது.

இவ் வகரத்தின் பெருமையை ஒருபடி மேற்சென்று சிவவாக்கியர்,

''அகார காரணத்துளே அனேகனேக ரூபமாய்
உகார காரணத்துளே உறுதரித்து நின்றனன்
மகார காரணத்துளே மயங்கிநின் றவையகம்
சிகார காரணத்துளே சிறந்தது சிவாயமே''

எனவரும் மற்றும் பல பாக்கள் வாயிலாய் இறைவனைக்காட்டும் முகத்தான் அகரத்தின் முதன்மை தோன்ற விளக்கம் தருகிருர். அகார காரணத்துளேமென்பதால் மேல் காட்டிய விளக்கங்கள் தூலமானதாகும். சூக்கும அகரவிளக்கமும், அதிசூக்குமமான காரண அகரவிளக்கமும் ''எட்டும் இரண்டும்''(அ, உ)என்பன போன்ற அனுபவ விளக்கமும் ஞானசிரியர் முகமாக அறிந்துணரவேண்டும்

Koviloor Digital Library

தூலமாக விளங்கும் பொருளேக்காட்டி அதன் வாயிலாய் சூக்குமமான பரம்பொருளே விளங்கும் படி அருள்கிறுர்கள் பெரியோர்கள் என்பதை,

''தாலத்தின் மரங்கள் காட்டிதனிப்பிறை காட்டுவார் போல் ஆலத்தின் உடுக்கள் காட்டி அருந்ததி காட்வார்போல் தூலத்தை முன்புகாட்டி சூக்கும சொரூபமான மூலத்தை பின்பு காட்ட முனிவரர் தொடங்கினுரே'' என்று அறிவிக்கிறது கைவல்யம். வானத்தில் உள்ள பிறைச்சந்திரனே காட்டுமுகத் தான் ஒருவர் மற்ருெருவருக்கு சற்று தூரத்தில் உள்ள ஒரு மரத்தைக்காட்டி அத்தமரத்தின்மேல் அப்படிபார் என்று சுட்டு விரலால் காட்டி அந்த விரல் மூலம் மரத்தின் பாகத்தின் மேல் பிறை தெரிவதைக்காட்டுவதுபோலும், திருமணச்சடங்கில் வானத்தில் உள்ள உடுக்களேக்காட்டிஅருந்ததியைக்காட்டுவது போலவும், கண்ணுக்குத்தோன்றும் பொருளே உவமையாகக் காட்டி கட்புலனுக்கும் மனத்திற்கும் புலனுகாத பொருளே நன்ருக உணரும்படி விளக்கம்தருவர் பெரியோர் என்று கைவல்யம் கூறுவதை இவ்விடத்து ஒப்புநோக்குவது சாலச் சிறந்ததாகும்.

நாம் பெயரும். உருவங்களேயும் பார்க்கும்போது காரணம் விளங்குவதில்லே. காரணத்தையறிகிறபோழ்து பெயரும் உருவமும் விளங்குவதில்லே. இதனே திருமந்திரம்

''மரத்தை மறைத்தது மாமதயானே
மரத்தில் மறைந்ததும் மாமதயானே
பரத்தை மறைத்தது பார்முதல் பூதம்
பரத்தில் மறைந்ததும் பார்முதல் பூதமே''

என்னும் பாட்டால், மரத்தால் செய்த யானேயின் உருவத்தை உற்று நோக்கினுல் மரம் மறைந்து யானே தெரிகிறது, உண் மையை உற்றுப்பார்த்தால் யானே மறைந்து மரம் தெரிகிறது அதுபோன்று உலகதோற்றங்களால் பரம் மறைந்து விளங்கு கிறது.

Koviloor Digital Library

கல்லைக் கண்டால் நாயைக் காணோம்
நாயைக் கண்டால் கல்லைக் காணோம் என்பதும்

மேற் சென்னது போலவேயாம்.

நாம் காது, மூக்கு, கழுத்து, கை முதலியவற்றில் அணியும் அணிகலன்கள் பலவித உருவமும் பெயரும் உடையன என்ருலும், பவுன் ஒன்ருலே ஆகியது போல,

குத்துவிளக்கு, கைவிளக்கு, சரவிளக்கு, துண்டாவிளக்கு, குழல் விளக்கு முதலிய விளக்குகள் பலவாயினும் ஒளி ஒன்றே யாதல் போல எழுத்துக்களாகப் பார்க்கும்போது அகரம் விளங்காமல் ஊன்றியறியும்போது அகரமின்றி எழுத்துக்கள் இல்லை என உணரக்கிடப்பது போலும் எல்லா எழுத்துக்களாக விளங்கி தனித்தும் அகரம் விளங்குகிறது.

இந்த உவமையை எழுத்தறிந்த யாவரும் மிகத்தெளிவாக தெரிந்து கொள்ளும்படி காட்டி அதன் மூலம் எல்லாமுடைய அருட்பெருஞ்சோதி ஆண்டவரே எல்லாமாயும் அல்லவுமாயும் விளங்குகிருர் என்பதையும் அவர் ஒன்றேபொருள்எனக்காட்டிய பெரியோர்களுடைய பொன்னடிகளையும் சகல வேதாகமபுராண இதிகாச சாத்திரதத்துவங்களுள் புதைந்து மறைந்துள்ள செல்வங்களை யெடுத்து நமக்கு பயன்பெற வழங்கிய திருவருட் பிரகாச வள்ளலார் திருவடிக்கமலங்களையும் வாழ்த்துவோம். வணங்குவோம் வாழ்வோம்.

அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை
அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி.